(இ) ஆம் எனில், எந்த எந்த ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) பல்லடம் வட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து சமுதாயக் கிணறுகள் வெட்டக் கோரி விண்ணப்பங்கள் ஏதும் அரசுக்கு வரவில்லை.

(இ) எழவில்லை.

கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகள்.

***697 வினா—திரு. எஸ். வடிவேல் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடம் யூனியனில் உள்ள கோபால் சமுத்திரம், திருமுல்லைவாசல் ஊராட்சி மன்றங்களை பேரூராட்சி மன்றங்களாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

சென்னை மாநகராட்சியில் பணியாளர்கள் நியமனம்

***698 வினா—திரு. ந. சோமசுந்தரம் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சியில் பணியாளர்கள் நியமனம் செய்வதில் தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய விகிதாச்சாரம் அளிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை மாநகராட்சிப் பணியின் IA, IB, II பிரிவு அலுவலர்களுக்கான பொறியியல் பணி விதிகளிலும், பொதுச் சுகாதாரம், மருத்துவப் பணி விதிகளிலும், நேரிடையாக அலுவலர்களை நியமனம் செய்யும்போது தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய விகிதாச்சாரம் அளிக்கப்படவேண்டும் என்று விதியுள்ளது. மற்ற III, IV பிரிவு அலுவலர்கள் நியமனம் சம்பந்தமாக ஷ விகிதாச்சாரம் ஏற்படுத்தப்படவில்லை.

திரு. வை. பாலசுந்தரம் : சென்னை மாநகராட்சி போன்ற ஸ்தல ஸ்தாபன அமைப்புகளில் அவர்களுக்கு 18 சத விகிதம் ஒதுக்கப்படவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. நம் அரசு அவ்வாறு ஒதுக்குவதற்கு சட்ட பூர்வமாக ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநகராட்சியில்தான் அவர்களுடைய பைலாக்கள் திருத்தப்பட வேண்டும்.